1968 மார்ச் 27]

வருமானம், வசதிகளை மற்றவர்கள் தருவார்களானல், எந்த முறையாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். நம் மாநிலத்தில் ஒரு குழுவினர் அதுபற்றி ஆராய்ந்து அதனல் எதிர்பார்க்கப்பட்ட பலன் ஏற்படவில்லை, சூழ்நிலை அதற்கேற்ப இல்லை, மக்கள் விருப்பம் அதற்கேற்ப இல்லை, ஆகவே அதில் நாம் வெற்றிபெற முடியவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அதன் கருத்தை சாதாரண பொதுக் கல்வித்துறையில் புகுத்தலாம். ஏற்றுக் கொள்ளலாம் என்று கருத்துத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அந்த முறையில் சிலபல முறைகள் பொதுக் கல்வியோடு இணைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பெ. மலைச்சாமி: தற்போது வேலை இழந்திருக்கிற இந்தி ஆசிரியர்களுக்கு கைத்தொழில் பயிற்சி தந்து அவர்களை கைத்தொழில் ஆசிரியர்கள் ஆக நியமிக்கிற எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவரவர்கள் விருப் பத்திற்கேற்ப, அவரவர்களுக்கு இருக்கிற ஆற்றலுக்கேற்ப, எதில் எதில் ஈர்த்துக் கொள்ளலாமோ, அதில் ஈர்த்துக் கொள்ளலாம். கைத்தொழில் பயிற்சி பெற்றிருந்து அதைச் செய்ய முன்வந்தால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு தரலாம்.

வால்பாறையில் பெண்களுக்கு உயர்நிலைப்பள்ளி

* 339-உ. வினா.—**திரு. இ. ராமசாமி:** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

வால்பாறை அரசினர் உயர்தரப்பள்ளியில் சுமார் 2,000-க்கும் அதிகமான மாணவ மாணவிகள் படித்து வருவதால், அங்கு பெண் களுக்கு தனியாக ஒரு உயர்தரப் பள்ளி நடத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. இ. ராமசாமி: வால்பாறை அரசினர் உயர்நிலைப்பள்ளியில் 2000-த்துக்கு அதிகமான மாணவ மாணவிகள் ஒன்றாகப் படிப்ப தால் கல்வியில் தரக் குறைவும் ஒழுக்கக் கேடும் ஏற்படுவதற்கு ஏது வாக இருப்பதால், பெண்களுக்கென தனியாக ஒரு உயர்தரப்பள்ளி ஆரம்பிக்க அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: வால்பாறைப் பகுதி யில் சேக்ரட் ஹார்ட் கர்ல்ஸ் ஹைஸ்கூல் இருந்து வருகிறது. அதில் 303 பெண்கள் பயின்று வருகிறார்கள். அரசினர் கழகப் பள்ளியில் 590 பெண்கள் பயின்று வருகிறார்கள். ஆகவே அங்கு ஒரு பெண்கள் பள்ளி வைக்கவேண்டும் என்று விண்ணப்பம் எதுவும் அந்தப் பகுதியில் இருந்து அரசினருக்கு வரவில்லை. ஒரு

பெண்கள் பள்ளி வைப்பதற்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் அளவுக்கு கட்டிட வசதி, இட வசதி மற்றவைகள் எல்லாம் தேடித்தருகிற முயற்சியில் உறுப்பினர் அவர்கள் ஈடுபட்டு நிபந்தனைகளை எல்லாம் நிறைவேற்றித்தர முன் வருவார்களானால், ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி வைப்பதுபற்றி யோசிக்கலாம். ஆண்கள் பள்ளியில் 590 பெண்கள் பயின்று வருகிறார்கள். இன்னொரு பெண்கள் பள்ளியில் 203 பெண்கள் பயின்று வருகிறார்கள். அதில் வேண்டுமானால் போகலாம். இனி ஒரு பள்ளி ஆரம்பிக்கவேண்டுமென்றால், அடிப்படை நிபந்தனைகளை நிறைவேற்ற முன்வந்தால் அதைப்பற்றி யோசிக்கலாம்.

New Ration Cards for residents in Coimbatore

* 340 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the City Rationing Officer, Coimbatore city is making arrangements to distribute new ration cards to the residents of Coimbatore city?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கோயம்புத்தூர் நகர வாசிகளுக்கு புதிய உணவுப் பங்கீட்டுக் கார்டுகள் வழங்கப்பட்டு விட்டன.

THIRU K. VINAYAKAM : May I know the number of cards distributed and how does it compare with the number that is existing in the City of Madras?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கோவைக்கும் அதற்கும் பொருத்தம் பார்ப்பது சரியல்ல. கோவையில் ஏறக்குறைய 9 லட்சம் மக்களுக்கு மேல் ரேஷன் கார்டு முறையின் கீழ் வருகிறார்கள். இப்போது ஏறக்குறைய ஒரு லட்சம் அறுபதினாயிரம் புதுக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. சென்னை நகரம் பற்றிய தகவல் தற்சமயம் என்னிடம் இல்லை. ஆனால் சென்னை நகரத்தில் ஏறக்குறைய முப்பது இலட்சம் மக்கள் இந்த உணவுப் பங்கீட்டு முறையில் அனுகூலத்தைப் பெறுகிறார்கள்.

DR. H. V. HANDE : What is the off take of rice per month in Coimbatore city, are the residents in the suburbs of Coimbatore also included in the figure that the Hon. Minister gave, what is the quantity of ration allowed and is there any representation from the people that they want more rice?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பொதுவாக ஏறக்குறைய 4 ஆயிரம் டன் அளவில் கோவைக்கு ரேஷன் கார்டு முறையில் வருகிறது. 1400 கிராம் கொடுக்கப்படுகிறது. இந்திய சர்க்கார் அவ்வளவுதான் கொடுக்கவேண்டும் என்று உத்திரவு போட்டிருக்கிறார்கள், இந்தியா முழுவதும் கன்ஸ்யூம் செய்ய வேண்டுமென்று. 400 கிராம் கோதுமை கொடுத்தால் சரியாகிவிடும். சில வேளைகளில் வருகிறது. சில வேளைகளில் வருவதில்லை.